பக்கங்கள் 12+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## A/L பரீட்சைப் பெறுபெறு வெள்ளியன்று வெளியீடு

**கல்வி அமைச்சர் அறிவிப்பு**



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 16 புதன்கிழமை 29.05.2024 அதிர்வு 303





# ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில் ரணில் உறுதி

## நாடாளுமன்றத் தேர்தலும் ஒத்திவைக்கப்படாது என்கிறார் ஹறின்

**“மக்கள் ஆணையுடனேயே ஆட்சிக்கு வரவேண்டும் என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கின்றார். எனவே, ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் நிச்சயம் நடைபெறும்.”**

**- இவ்வாறு அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

**“ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் இப்போதைக்கு அவசியமில்லை. இரண்டு தேர்தல்களும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட வேண்டும். தற்போதைய ஜனாதிபதியே பதவியில் தொடர வேண்டும்“ - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார கூறியுள்ளாரே?” - என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் ஹறின் மேற்கண்டவாறு கூறினார்.**

**அவர் மேலும் கூறியதாவது:-**

“அவ்வாறு இல்லை, தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் ஆசியுடன் வெற்றி பெறுவதையே ஜனாதிபதி ரணில் விரும்புகின்றார். தேர்தலில் போட்டியிடவுள்ளதை அடுத்த வாரமளவில் அவரே அறிவிப்பார். ஜனாதிபதித் தேர்தலில் அவர் களமிறங்குவதும், வெற்றி பெறுவதும் உறுதி.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் வருவார்கள். அதற்கான நேரம் வரும். அதுவரை காத்திருப்போம். நாடாளுமன்றத் தேர்தலும் உரிய நேரத்தில் நடைபெறும். அதுவும் ஒத்திவைக்கப்படாது.” – என்றார்.

## சஜித் - அநுர நேரடி விவாதம் ஜூன் 6 இற்கு முன் நடக்குமா?




“ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்கிடையிலான விவாதத்துக்கு மாத்திரமே நாங்கள் தயார். எதிர்வரும் 6ஆம் திகதிக்குப் பின்னர் விவாதம் குறித்து எந்தப் பேச்சுக்கும் நாங்கள் தயாரில்லை.” 04

## மைத்திரிக்கு எதிரான தடை மேலும் நீடிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட தடையை மேலும் நீடித்து 04

## மோ. சைக்கிளில் மனைவியுடன் சென்றவர் யானை தாக்கிப் பலி!



காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம், மதவாச்சி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட தில்லன்கல்ல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது. 04

# சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு ஜனாதிபதியால் 110 மில்லியன் ரூபா நிதி!

(ந.லோகதயாளன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு 110 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் கேட்போர் கூட கட்டட நிர்மாணத்துக்கே இந்த 110மில்லியன் ரூபா நிதி ஜனாதிபதியால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக 70 மில்லியன் ரூபா நிதி பாடசாலை கட்டட நிர்மாணத்துக்காக விடுவிக்கப்பட்டு கட்டட நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

2019 ஆம் ஆண்டு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு அப்போதைய நல்லாட்சி அரசால் 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஜனாதிபதி முன்னர் பிரதமராக இருந்த போது, பாடசாலை பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு புதிய கேட்போர் கூட கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டி வைத்தார்.

இருந்தபோதும் நாட்டின் ஸ்திரமற்ற அரசியல் நிலை காரணமாக குறித்த பணி முடிவுறுத்தப்பட முடியாமல் தடைப்பட்டது. இது தொடர்பில் கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதனையடுத்தே இந்த 110 மில்லியன் ரூபா நிதியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் கேட்போர் கூட கடடட நிர்மாணத்துக்காக ஒதுக்குமாறு ஜனாதிபதியால் பணிப்புரை விடுக்கப்பட்டு முதல் கட்டமாக 70 மில்லியன் ரூபா நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# மருதமுனையில் ‘நீண்ட இருட்டு’ கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனையை சேர்ந்த கவிஞர் எம்.எச்.ஏ.கரீம் எழுதிய “நீண்ட இருட்டு” கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு எம்.எச்.பவுண்டேஷன் ஏற்பாட்டில் ஓய்வு பெற்ற வங்கியாளரும் கவிஞருமான ஏ.ஆர்.ஏ.சத்தார் தலைமையில் மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் எஸ்.எம்.எம்.ஜெமீல் நினைவரங்கில் நடைபெற்றது.

நூல் நயப்புரையை இலக்கிய விமர்சகர் ஜெஸ்மி எம். மூஸா மற்றும் கவிஞர் ஏ.எம்.குர்ஷித் ஆகியோர் நிகழ்த்தினர்.

சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.எம். முஹம்மட் முபீன், எழுத்தாளர் எம்.எச்.ஏ. கரீமின் எழுத்துலக பிரவேசம் பற்றியும் மருதமுனை கிராமத்தின் சமகால எழுத்துக்கள் பற்றியும் கடந்த கால அனுபவக் குறிப்புகளுடன் விளக்கி உரையாற்றினார்.

முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம். அன்சார், சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எஸ்.எம்.ஜெமீல் , உதவி பிரதேச செயலாளர் திருமதி அய்மா நிஃமத்துல்லா, கலாநிதி திருமதி மஸ்றூபா மஜீத், சிரேஷ்ட விரிவுரையாளர் எப்க.எம்.அஹமது அன்ஸார் மௌலானா, டாக்டர். முஜாஹித், டாக்டர். எஸ்.எம். தொகுத்தார், வர்த்தகர் ஏ.ஜே.நளீர் ஆகியோர் முதன்மை பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில், அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் வை.எல். அன்சார், வெண்ணிலா சஞ்சிகையின் ஆசிரியர் எஸ்.ஏ.கப்பார், கவிஞர் மருதூர் மஃஜூன், கவிஞர் ஜமீல், ஆய்வாளர் ஏயெம் அம்றிதா, கவிஞர் றாபி, கவிஞர் முனாஸ், கவிஞர் டீன் கபூர், கவிஞர் முபாறக், கவிஞர் நௌபல், கவிஞர் மருதமுனையாளன் றபீக் , கவிதாயினி கவிநுட்பம் பாயிஸா, கவிஞர் மருதமுனை ஹஸன், போன்றோருடன் கவிஞர்கள் இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஏற்புரையை நூலாசிரியர் கவிஞர் எம்.எச்.ஏ.கரீம் நிகழ்த்தினார். நிகழ்வுகளை கவிஞர் விஜிலி மூசா தொகுத்து வழங்கினார்.





# அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் திடீர் பரிசோதனை; எட்டு உணவகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் அறிவுறுத்தலுக்கமைய, பிராந்திய சுற்றுச் சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எஸ். எம்.பௌசாத் பங்களிப்புடன் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பிரதேசங்களில் உணவு கையாளும் நிறுவனங்கள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் அக்கரைப்பற்று பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவு நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இதன்போது 65 உணவு கையாளும் நிறுவனங்கள் சோதனை செய்யப்பட்டு அதில் 8 நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வர்த்தகர்கள் மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு அறிவுரை ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இதில், அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.ஏ.காதர், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.இஸ்மாயில் உட்பட சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# ஞானச்சுடர் 317 ஆவது இதழ் வெளியீடு!

வடமராட்சி, தொண்டைமானாறு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் 317 ஆவது இதழான வைகாசி மாத மலர் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சந்நிதியான் ஆச்சிர மண்டபத்தில் ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுதகலா சுரபி செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கிராம சேவையாளர் ஞான சபேசன் வெளியீட்டு உரையையும் விரிவுரையாளர் துரை கணேசமூர்த்தி மதிப்புரையையும் நிகழ்த்துவர்.



## எட்டு மாவட்டங்களுக்கு

# மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

எட்டு மாவட்டங்களின் சில பிரதேச செயலகங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சூறாவளியின் தாக்கம் நாளை முதல் குறைவடையும் என்று



வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சியின் காரணமாக, எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று தினங்களில் நாட்டின் தென்மேற்கு பிராந்தியத்தில் மழையுடனான காலநிலை நிலவும் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, மழையுடனான காலநிலை காரணமாக 10 ஆயிரத்து 483 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 156 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## ஓட்டோ தரிப்பிடத்தில் தகராறு:

# மகனைக் காப்பாற்ற முயன்ற தந்தை சாவு

ஓட்டோ தரிப்பிடம் தொடர்பில் ஏற்பட்ட தகராறில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இளைஞர் ஒருவர் தனது ஓட்டோவை நிட்டம்புவ, திஹாரிய பிரதேசத்தில் உள்ள ஓட்டோ தரிப்பிடத்தில் நிறுத்த முற்பட்டபோது அங்கிருந்த ஏனைய சாரதிகள் அந்த இளைஞருடன் தகராறில் ஈடுபட்டனர்.

இதன்போது, அங்கிருந்த இளைஞரின் தந்தை தனது மகனைக் காப்பாற்ற முற்பட்டபோது தாக்குதலுக்குள்ளாகிக் காயமடைந்தார்.

அவர் நிட்டம்புவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிட்டம்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சஜித் - அநுர...

– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் விவாத ஏற்பாட்டாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பொருளாதாரக் குழுக்களுக்கிடையிலான விவாதத்துக்கான திகதியை தாமதிக்காமல் அறிவிக்குமாறு தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன் உறுப்பினரும் விவாத ஏற்பாட்டாளருமான நளின் பண்டார, தேசிய மக்கள் சக்தியின் விவாத ஏற்பாட்டாளர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்குக் கடந்த திங்கட்கிழமை இரண்டாவது தடவையாக அனுப்பிவைத்திருந்த கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“விவாதத்துக்கு சில திகதிகளைக் குறிப்பிட்டு, அந்தத் திகதிகளில் ஒரு தினத்தில் இரண்டு கட்சிகளின் பொருளாதாரக் குழுக்களுக்கிடையில் விவாதத்தை நடத்தத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தபோதும் தேசிய மக்கள் சக்தியின் பதில் கடிதத்தில் பொருளாதாரக் குழுக்களுக்கிடையிலான விவாதம் தொடர்பாக எந்தத் தகவலும் தெரிவிக்காமல், அதன் கவனத்தை வேறு திசைக்குகே கொண்டு செல்லும் வழமையான முயற்சிகள் மூலம் இந்த இரண்டு விவாதங்களையும் நடத்தாமல் இருப்பதற்கான திட்டமாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம்.” – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் விவாத ஏற்பாட்டாளருமான நளின் பண்டாரவின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் விவாத ஏற்பாட்டாளர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

“விவாதம் தலைவர்களுக்கடையில் மாத்திரமே நடத்தப்படும். அதுவும் எதிர்வரும் 6ஆம் திகதியே நடத்தப்படும். 6ஆம் திகதிக்கு அவர்கள் வராவிட்டால் அதன் பின்னர் விவாதம் தொடர்பாக எந்தப் பேச்சும் இல்லை. பொருளாதாரக் குழுக்கள் தொடர்பாகப் பேச்சும் இல்லை. தேவையற்ற வேலைகளுக்கு வர நாங்கள் தயார் இல்லை.” – என்றார்.

### மைத்திரிக்கு...

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் ஜுன் மாதம் 12 ஆம் திகதி வரை குறித்த தடையை நீடித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு, கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே சு.கவின் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட தடை உத்தரவை ஜுன் மாதம் 12 ஆம் திகதி வரை நீடித்து நீதிபதி உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

### மோ.சைக்கிளில்...

நேரியகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்தார் என்று மதவாச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தனது மனைவியுடன் வயலை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருக்கும்போது காட்டு யானை தாக்கி உயிரிழந்தார்.

சம்பவத்தின்போது இவரது மனைவி எந்தவித காயங்களுமின்றி உயிர் தப்பினார் என்றும் பொலிஸார் கூறினர்.

உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனைக்குப் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட் டனர்.

### A/L பரீட்சை...

வெளியிடப்படவுள்ளன என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் நடைபெற்றது. இந்தப் பரீட்சைக்காக 3 இலட்சத்து 46 ஆயிரத்து 976 பரீட்சாத்திகள் தோற்றியிருந்தனர்.

இவ்வாறு தோற்றிய பரீட்சார்த்திகளில் 2 இலட்சத்து 81 ஆயிரத்து 445 பாடசாலை பரீட்சாத்திகளும், 65 ஆயிரத்து 531 தனியார் பரீட்சாத்திகளும் உள்ளடங்குகின்றனர்.



# டிக்கோயா, தரவளை விவேகானந்தர் இளைஞர் கழக 25 ஆவது வருட பூர்த்தி



டிக்கோயா, தரவளை விவேகானந்தர் இளைஞர் கழகம் தனது 25 ஆவது வருட பூர்த்தியையும் வெள்ளி விழாவையும் தேசிய இளைஞர் தினத்தை சிறப்பித்துக் கொண்டாடியது.

அவர்களின் சிறப்பான சமூக பணிகள் பலரை சமூகத்தில் முன்னேற வைத்துள்ளது.

அந்தந்த காலப் பகுதியில் அடுத்த தலைமுறையை இனங்கண்டு அடுத்த தலைமுறைக்கு முறையாக தலைமைத்துவத்தைப் பரிமாற்றி முன் னுதாரணமான இளைஞர் கழகமாக திகழ்கிறது.

இந்த நிகழ்வில் பல சமூக சேவையாளர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். 50 இற்கும் அதிகமான ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். மேலும் ஏனைய துறைசார்ந்த பலர் கௌரவிக்கப்பட்டனர்.

விவேகானந்தர் இளைஞர் கழகத்தின் தலைவராக இருந்து ஆசிரியராக பணியாற்றி தற்போது கொழும்பு உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக பணியாற்றும் சுப்ரமணியம் காண்டீபனும் கௌரவிக்கப்பட்டார்.

25 வருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் கழகம் இன்றும் செயற்படுகிறது.





# மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தில் வைகாசி பொங்கல்

யாழ்ப்பாணம், வடமராட்சி, மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வைகாசி பொங்கல் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

திருவிழாவில் பக்தர்கள் நூற்றுக் கணக்கில் கலந்து கொண்டு வழிபட்டதுடன் பக்தர்கள் காவடி, தூக்குக் காவடி, பாற்செம்பு, கரகம் என்பன ஆடி தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொண்டனர்.

சிறுமிகள், சிறுவர்களின் கரகாட்டம் பக்தர்களை பெரிதும் கவர்ந்துள்ளது.

இந்தத் திருவிழாவில் மந்திகையை சூழவுள்ள ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மக்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரயந்த அமரசிங்க தலைமையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அலப்பறை அறிவிப்பு

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத் தானாம் ஆண்டி' என்பார்கள். அந்தக் கதையாகியிருக்கின்றது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசி யக் கட்சிப் பொதுச் செயலாளர் பாலித ரங்க பண்டார மேற்கொண்ட அறிவிப்பு.

ஜனாதிபதித் தேர்தலையும் நாடாளு மன்றத் தேர்தலையும் சர்வஜன வாக் கெடுப்பு மூலம் தள்ளிப்போட்டு, ஜனா திப தியினதும் நாடாளுமன்றத்தினதும் பதவிக்காலத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப் பது பற்றிய அவரின் யோசனைத் திட்ட அறிவிப்பு ரணில் தரப்புக்கு பெரும் அரசி யல் நெருக்கடியை - பின்னடைவை - தந்து நிற்பது கண்கூடு.

அவர்களது கட்சிக்குள் இருந்தே எதிர்ப்பு அறிக்கை வெளியிட்டு, கட்சி யைப் பாது காக்கும் சமாளிப்பு நடவடிக் கையை விரைந்து மேற்கொள்ள வேண் டிய இக் கட்டை இந்த நெருக்கடி ஏற்ப டுத்தி விட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் இந்த அறிவிப்பை வெளி யிட்ட சில மணி நேரத்துக்குள்ளேயே கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப் பாளர் ரவி கருணநாயக்கா, அதனைக் கடுமையாக விமர்சித்துப் பதில் அறி விப்பு வெளியிடும் நிலைமை ஏற்பட் டுள்ளது.

''ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயக மாண்புகளையும் கோட்பாடு களையும் பெரிதும் மதிப்பவர். அவரது அரசியல் பயணத்தில் மக்கள் ஆணை மூலம் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே பிரதான கொள்கைப் போக்காக அமைந்துள்ளது. எனவே தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப் படும். அவை தள்ளிப் போடப்பட மாட்டா. ஜனாதிபதித் தேர்தலில் எங்கள் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கதான்'' - என்று ரவி கருணநாயக்கா கூறியிருக் கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலா ளரின் கருத்துக்கு எதிர்வினை ஆளும் பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து தான் விரைந்து வந்தது.

தேர்தல்களைத் தள்ளிப் போடுவதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைக ளைப் பறிக்கக்கூடாது என்ற சாரப்பட மொட்டுக் கட்சியின் தேசிய அமைப் பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம் ஆகியோர் பகிரங்கமாக அறிவித்திருக் கின்றனர்.

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தேர்தல் களை ஒத்திப்போடும் ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டம் பற்றிய அறிவிப்பு வந்ததுமே அது தொடர்பில் மொட்டுக் கட்சியின் உயர் மட்டத்திலிருந்து விரைந்து மறுப்பு தெரிவித்திருக்கின்றமை நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு இவ்விடயத்தில் தெளிவான செய்தி ஒன்றை உணர்த்தி இருக்கும் எனக் கருதலாம்.

இதேசமயம் ஐக்கிய தேசியக் கட்சிச் செயலாளரின் உத்தேச திட்ட அறிவிப்பை கடுமையாக ஆட்சேபித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் மக்களின் ஜனநாயக மற்றும் வாக்க ளிக்கும் உரித்தைத் தடுப்பதற்கு எதிராகக் கடுமையான கருத்துக்களை வெளியிட் டுள்ளனர்.

அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன கூட திட்டமிட்டபடி தேர்தல் களை நடத்துவதற்கு தேவையான நிதியை வழங்குவதற்கு உரிய பணிப்பு ரையை ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு வழங்கியுள்ளார் எனத் தெரிவித்து நிலைமையை சமாளிக்க முயன்றிருக்கிறார்.

அரசமைப்பு ஏற்பாடுகளின்படி, ஜனாதி பதி தேர்தலை அடுத்த நான்கரை மாதங் களுக்குள் நடத்தி முடிக்க வேண்டும்.

அந்தத் தேர்தலில் தான் போட்டியிடு வாரா என்பதை அறிவிக்கும் திராணி கூட தேர்தல் இவ்வளவு காலம் நெருங்கிய பின்னரும் இன்னும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வரவில்லை. இது விடயத்தில் அவர் பெரும் தடுமாற்றத்தில் - குழப்பத்தில் - தான் இருக்கிறார் என் பதை இந்தத் தாமதமே நிரூபித்து நிற் கின்றது.

இந்தச் சமயத்தில், தனது கட்சியின் பொதுச் செயலாளர் மூலம் தேர்தலை ஒத்திவைக்கும் திட்ட யோசனையை அவர் அவிழ்த்து விட்டிருக்கின்றமை, அவரின் அரசியல் செல்வாக்கு நிலை மையை மேலும் மோசமான கட்டத் துக்குத் தள்ளி விழுத்தியிருக்கின்றது என்பதுதான் யதார்த்தம்.

தேர்தலை கண்டு அஞ்சுபவர் ரணில் என்ற பொதுவான கருத்து நிலைப் பாட்டை இந்த நகர்வு மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தியிருப்பது ரணி லில் அரசியல் எதிர்காலத்துக்குப் பாதிப்பு தான்.



# வடமேல் மாகாண அமைச்சுகளின் அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம்

(எம்.எம்.ஜெஸ்மின்)

வடமேல் மாகாண அமைச்சுக்களின் 2024 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம், வடமேல் மாகாண ஆளுநரின் அலுவலகத்தில், ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

வடமேல் மாகாண சுகாதார, சுதேச மருத்துவம், சமூக நலனோம்புகை, நன்னடத்தை மற்றும் சிறுவர் விவகாரம், மகளிர் விவகாரம் மற்றும் சபை அலுவல்கள் அமைச்சின் அபிவிருத்தி மீளாய்வு தொடர்பான விவகாரங்கள் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

வடமேல் மாகாணத்தில் உள்ள போதனா மருத்துவமனைகள், ஆதார வைத்தியசாலைகள், பிரதேச சுகாதார பணிமனைகள் உள்ளிட்ட சுகாதாரம், சுதேச மருத்துவமனைகளில் நிலவும் ஆள்பற்றாக்குறை, மாகாண நன்னடத்தை திணைக்களத்தின் சிறுவர் தங்குமிடங்களில் உள்ள குறைபாடுகள், மாற்றுத் திறனாளி சிறுவர்களுக்கான தங்குமிட வசதிகள் மேம்படுத்தல், அவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளில் மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சின் நேரடி பங்களிப்பைப்பெற்றுக் கொள்ளல், மற்றும் சமூக நலனோம்புகைத் திணைக்களத்தின் ஊடான பொது மக்கள் நலனோம்புகை செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில் வடமேல் மாகாண பிரதம செயலாளர் தீபிகா குணரத்தின, ஆளுனரின் செயலாளர் எம். ஐ. இலங்கக்கோன், பிரதிப் பிரதம செயலாளர்களான பிரேம்குமார, கீதாஞ்சலி பண்டாரநாயக்க, மற்றும் மாகாண நன்னடத்தை ஆணையாளர் மல்காந்தி பியசேன உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# ஸ்ரீ லங்கா பென் கிளப் தலைவியால் வெளியிடப்பட்ட நூல்கள் கையளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஸ்ரீ லங்கா பென் கிளப்பின் தலைவியும், ஓய்வுபெற்ற ஆசிரியையுமான மசூறா சுஹூர்தீனால் வெளியிடப்பட்ட வெளியீடுகளான அவரி சஞ்சிகை, சிறுகதை நூல்கள் என்பன ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமிடம் கல்முனை ஆஸாத் பிளாஸா வரவேற்பு மண்டபத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டன.

இதன் போது ஸ்ரீ லங்கா பென் கிளப் அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.








# தகவலறியும் சட்டமூலம் தொடர்பில் மட்டு. இளையோருக்கு செயலமர்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தகவலறியும் உரிமைச் சட்டமூலம் தொடர்பில் இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வு அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பிலுள்ள அமெரிக்க ஐஹெபின் அனுரணையில் இடம்பெற்ற நிகழ்வில் தகவலறியும் உரிமைச் சட்டமூலத்தை வினைத்திறனாக பயன்படுத்துவது, அதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது, அதனுடன் தொடர்பான அதிகாரிகளை தொடர்பு கொள்வது தொடர்பான விளக்கங்களை சிரேஷ்ட ஊடகவியலாளரும், தகவலறியும் உரிமைச் செயற்பாட்டாளருமான றிப்தி அலி இதன் போது தெளிவாக வழங்கியிருந்தார்.

மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 25 இளைஞர் யுவதிகள் பங்கேற்ற இந்தச் செயலமர்வில் அவர்கள் வினவிய கேள்விகளுக்கு இதன் போது தெளிவான விளக்கங்களைப் பெற்றுக் கொண்டனர். தொடர்ச்சியாக இந்த செயலமர்வு நாடு தளுவிய ரீதியில் நடத்தப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா பொருளாதார நிலைய மரக்கறி விலையின் இன்றைய நிலை



(ஆ.ரமேஸ்)

நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் ஊடாக கொள்வனவு மற்றும் விற்பனை செய்யப்படும் மரக்கறி விலைகளின் அன்றைய (29) நாளுக்கு உரிய விலை பட்டியலை இந்த நிலையத்தின் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

அதன் அடிப்படையில் நுவரெலியாவில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகோஸ் 70-90 ரூபா, கரட் 125-145 ரூபா, லீக்ஸ் 270-290 ரூபா, முள்ளங்கி 80-100 ரூபா, இலையுடன் பீட்ரூட் 220-240 ரூபா, இலையில்லா பீட்ரூட் 320-340 ரூபா, உருளை கிழங்கு 290-310 ரூபா, உருளை கிழங்கு சிவப்பு 270-290 ரூபா, நோக்கோல் 100-120 ரூபா என்று மொத்த விலை அறிவிக்கப்பட்டுள்ளது. கொத்தமல்லி இலை கிலோ ஒன்றின் விலை 1800-1900 ரூபாவாக உயர்ந்துள்ளது.

சலாது 1100-1200 ரூபா, புரக்கோலி 1000-1100 ரூபா, கோலிபிளவர் 1000-1100 ரூபா என ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாக விலையில் கொள்வனவு மற்றும் விற்பனை விலை அறிவிக்கப்பட்டுள்ளது



# ஒய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலகத்தால் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடந்த 34 வருடங்களாக கிராம உத்தியோஸ்தராக கடமையாற்றிய எம்.எம்.முஹம்மட் மாஹிர் அண்மையில் ஓய்வுபெற்றார்.

இவர் 1990 ஆம் ஆண்டு கிராம உத்தியோகத்தராக கல்முனை பிரதேச செயலகத்தில் முதல் நியமனம் பெற்று 11 ஆண்டுகள் கடமையாற்றி அதன் பின்னர் 2001 ஆம் ஆண்டு சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய வந்த நிலையில் தனது 34 வருடகால சேவையாற்றியுள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் (27) அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் நடைபெற்றது.



# பளவெளி ஆதிசிவன் ஆலய மகா கும்பாபிஷேகம்

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் வளத்தாப்பிட்டி பளவெளி ஆதிசிவன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜுலை மாதம் 15 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

ஜுலை 13 ஆம் திகதி கிராம சாந்தி இடம்பெற்று 14 ஆம் திகதி எண்ணைய்க் காப்பு இடம்பெறும்.

இந்த நிலையில், ஆலயத்துக்குத் தற்போது வர்ணம் பூசப்பட்டு வரப்படுகிறது.

ஆலயத்துக்கான கலசங்கள் திருவாசி கொடி மரம் பொருத்தும் பணிகள் இடம்பெறவுள்ளன. மணிகள், விளக்குகள், தீபங்கள், திருநீற்றுக் கிண்ணங்கள், தாம்பூலங்கள், செம்புகள், சங்குகள், காளாஞ்சி கொள்வனவு சப்பைரதம் செய்தல் போன்ற பல பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த உதவிகளைச் செய்ய விரும்பும் அடியவர்கள் ஆலய நிர்வாக சபையின் செயலாளர்.ச. தங்கவடிவேல் அல்லது தலைவர் எஸ். துரைசிங்கம் ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.





# நாவிதன்வெளிக் கோட்டத்தில் கணிதப் பூங்கா திறப்பு விழா!

சம்மாந்துறை, வலய நாவிதன் வெளிக் கோட்டத்தில் உள்ள வேப்பையடி கலைமகள் மகாவித்தியாலய கணிதப் பூங்கா வித்தியாலய அதிபர் கே. தியாக ராஜா தலைமையில் நேற்று செவ்வாய்க் கிழமை திறந்து வைக் கப்பட்டது.

கல்வி அமைச்சின் 'ஜெம்' திட்டத்தின் கீழ் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செல வில் நிர்மாணிக் கப்பட்ட இந்தப் பூங் காவை, பிரதம அதிதியாக கலந்து கொண்ட சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர் திறந்து வைத்தார்.

கௌரவ அதிதிகளாகப் பிரதிக் கல்விப் பணிப் பாளர்களான பீ.எம். வை.அரபாத், பி.பரமதயாளன், எச் .நைரூஸ்கான், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, பாடசாலை இணைப்பாளர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசேட அதிதிகளாக முன்னாள் அதி பர்களான என். பிரபாகர், கே.பேரானந் தம், பாடசாலை அபி விருத்திச் சங்க செயலாளர் கே .மதிவண்ணன் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

மிகவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கணித பூங்காவில் காட்சிப்படுத்தப்பட்ட கணித உருக்களுக்கான விளக்கங் களை மாணவர்கள் சிறப்பாக விவரித் தனர்.

புதிய அதிபர் கே. தியாகராஜாவின் காத்திரமான அர்ப்பணிப்பான சேவை பற்றி வாழ்த்துரைகள் வழங்கப்பட்டன.





# மூன்று நாள்கள் இசைத்தமிழ் விழா வெள்ளியன்று கொழும்பில் ஆரம்பம்!

## கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை திறப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்து சமய கலாச் சார அலுவல்கள் திணைக்களம் நடத் தும் மூன்று நாள் இசைத்தமிழ் விழா நாளை மறுதினம் (31) வெள்ளிக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் ஆரம்ப மாகின்றது.

இதன்போது கொழும்பு தமிழ்ச் சங் கத்தில் சுவாமிகளின் திருவுருவச் சிலை நிறுவப்படவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் யூ.அனிருத் தனின் ஏற்பாட்டில் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (31) முதல் மூன்று நாள்கள் நடைபெறும்.

வெள்ளிக்கிழமை பிற்பகல் சுவாமி விபுலானந்தரின் திருவருவச்சிலையுடன் சைவ மங்கையர்வித்தியாலயத் திலி ருந்து கொழும்பு தமிழ்ச் சங்கம் வரை ஊர்வலம் இடம்பெறும். 4 மணியளவில் அங்கு சுவாமி விபுலானந்தரின் சிலை ஆறுமுகநாவலரின் சிலைக்கு இடப் புறமாக நிறுவப்படவுள்ளது.

கொழும்பு தமிழ்ச்சங்க வரலாற்றில் முதல் தடவையாக நிறுவப்படும் இத் திருவுருவச் சிலையை, தற்போதைய தலைவரும் தென் கிழக்குப் பல்கலைக் கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரை யாளர் கலாநிதி க.இரகுபரன் தலைமை யில் கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் திறந்து வைப்பார். இந்தச் சிலையை சாஹித்தியரத்னா தி. திருமதி ஞான சேகரன் ஞானலக்ஷ்மி தம்பதியினர் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

# வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளன்று தியானம் செய்வதை அதிகரிப்பாராம் மோடி



டெல்லி,மே29

இந்தியத் தேர்தல் முடிவு வெளிவரும் நாளில் மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதை பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். 'வாக்கு எண்ணிக்கை நாளன்று நான் தியானம் செய்வதை அதிகரிப்பேன் என்று அவர் கூறியுள்ளார்.

இந்தியா முழுவதும் மொத்தமுள்ள 543 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு 7 கட்டங்களாக தேர்தல் நடைபெற்று வருகிறது. அதன்படி, இதுவரை 6 கட்டங்களாக 486 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றுள்ளது. எஞ்சிய 57 தொகுதிகளுக்கு இறுதிகட்டமான 7 ஆம் கட்ட தேர்தல் வரும் முதலாம் திகதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் 4 ஆம் திகதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி மற்றும் காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி முக்கிய கட்சிகளாக உள்ளன. 3 ஆவது முறையாக வெற்றிபெற்று ஆட்சியைத் தக்க வைக்க பா.ஜ.க. தீவிரம் காட்டி வரும் நிலையில் ஆட்சியைக் கைப்பற்ற காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணியும் தீவிரம் காட்டி வருகிறது.

தேர்தல் முடிவுகள் 4 ஆம் திகதி வெளியாக உள்ள நிலையில் அரசியல் கட்சியினர், பொதுமக்கள் தேர்தல் முடிவுகள் வெளியாகும் நாளை எதிர்பார்த்து காத்துள்ளனர்.


இந்நிலையில், தேர்தல் முடிவு வெளிவரும் நாளில் மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதை பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி ஏ.பி.பி. தனியார் செய்தி நிறுவனத்திற்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் தேர்தல் முடிவு வெளியாகும் நாளன்று உங்கள் மன நிலை எவ்வாறு இருக்கும் என்று தொகுப்பாளர் கேள்வி எழுப்பினார்.

அந்த கேள்விக்கு பதில் அளித்த பிரதமர் மோடி, தேர்தல் முடிவுகள் வெளியாகும் நாளில் நான் மிகவும் கவனமாக இருப்பேன். தேர்தலில் கிடைக்கும் தொகுதிகள் எவ்வளவு என்ற விவரத்தில் இருந்து நான் தள்ளியே இருப்பேன். தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளன்று நான் தியானம் செய்வதை அதிகரிப்பேன். பிற வேலைகளையும் அதிகரிப்பேன். வாக்கு எண்ணிக்கை நாளன்று எனது அறைக்குள் நான் யாரையும் அனுமதிக்கமாட்டேன். என்னை தொலைபேசியில் தொடர்புகொள்ளவும் யாரையும் அனுமதிக்கமாட்டேன். – என்று கூறினார்.

## விவேகானந்தர் பாறையில் தங்கி நின்று

# 3 நாள்கள் தியானம் செய்வதற்காக மோடி இன்று கன்னியாகுமரி வருகை



பிரதமர் நரேந்திர மோடி வருகையை முன்னிட்டு இன்று கன்னியாகுமரியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி டெல்லியில் இருந்து விமானம் மூலம் புதன்கிழமை மாலை 3.55 மணிக்கு திருவனந்தபுரம் வருகிறார்.அங்கிருந்துஹெலிக்கொப்டர் மூலம் கன்னியாகுமரி அரசு விருந்தினர் மாளிகைக்கு 4.35 மணி அளவில் வருகிறார். கன்னியாகுமரி பகவதியம்மன் கோயிலில் தரிசனம் செய்துவிட்டு, மாலை 5.30 மணி அளவில் கடல் நடுவே உள்ள விவேகானந்தர் பாறைக்கு தனி படகு மூலம் செல்கிறார். அங்கு விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் உள்ள தியானக் கூடத்தில் அமர்ந்து தியானம் செய்கிறார்.

வியாழக்கிழமை மாலையில் இருந்து ஜுன் முதலாம் மாலை வரை விவேகானந்தர் மண்டபத்தில் 3 நாள்கள் தொடர்ந்து தியானம் செய்கிறார். மாலை 3.30 மணிஅளவில் ஹெலிக்கொப்டர் மூலம் திருவனந்தபுரம் சென்று, அங்கிருந்து விமானத்தில் டெல்லி திரும்புகிறார்.

பிரதமர் நரேந்திர மோடி வருகையை முன்னிட்டு கன்னியாகுமரியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு ஏற்பாடுகளை திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி. பிரவேஷ்குமார் ஆய்வு செய்தார். திருவனந்தபுரத்தில் இருந்து கன்னியாகுமரிக்கு பிரதமர் வரும் வான்வழித் தடத்தில் ஹெலிக்கொப்டர் ஒத்திகை நடைபெற்றது. டெல்லியில் இருந்து வந்துள்ள, பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு அதிகாரிகள் ஹெலிக்கொப்டர் தளம், படகு தளத்தில் ஆய்வு செய்தனர். கடற்படையினர், கடலோரக் காவல் படையினர் கடல்பகுதிகளை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

பிரதமரின் வருகையால், வியாழக்கிழமை முதல் ஜுன் முதலாம் திகதி வரை விவேகானந்தர் மண்டபத்துக்கு சுற்றுலா பயணிகள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



# பாகிஸ்தானில் பஸ் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்து; 28 பேர் மரணம்

**கராச்சி,மே29**

பாகிஸ்தானில் கராச்சி நகரில் பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த பஸ் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரத்தில் இருந்த பள்ளத் தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளா னதில் பஸ்ஸில் பயணம் செய்த குழந் தைகள் பெண்கள் உள்பட 28 பேர் உயிரிழந்தனர்.

துர்பத்தில் இருந்து குவெட்டா நோக்கி சென்று கொண்டிருந்த பஸ், வாசுக் நகருக்கு அருகே விபத்தில் சிக்கியது. இந்த விபத்துக்குக் காரணம் பஸ் அதிவேகத்தில் இயக்கப்பட்டதே என்று கூறப்படுகிறது. ஆனால், பஸ்சின் டயர் வெடித்து விபத்து நேரிட்டதாக, அந் நாட்டிலிருந்து வெளியாகும் சில ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன. விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த 22 பேர் அரு கில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் சாலை விதிகளை சரியாக பின்பற்றாததாலும், பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை போக்குவரத் துத் துறை கடைப்பிடிக் காததாலும் இதுபோன்ற சாலை விபத்துகள் அதிகம் நிகழ்கின்றன.

இந்த மே மாதத்தில் மட்டும் 18 ஆம் தேதி நேரிட்டொரு விபத்தில் 13 பேரும், கடந்த 3 ஆம் திகதி நேரிட்ட விபத்தில் 20 பேரும் பலியானமை குறிப்பிடத் தக்கது.

# ரபா நகரில் மீண்டும் இஸ்ரேல் நடத்திய வான்தாக்குதலில் மேலும் 37 பேர் சாவு!

காசா,மே29

காசாவில் மீண்டும் இஸ்ரேல் நடத் திய வான்தாக்குதலில் 37 பேர் பலியா கினர் எனத் தகவல் வெளியாகி உள் ளது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே 7 மாதங்களுக்கும் மேலாக போர் நடந்து வருகிறது. இந்த போரில் காசாவில் மட்டும் 35 ஆயிரத்துக்கும் அதிகமா னோர் பலியாகியுள்ளனர். ஹமாஸை அடியோடு ஒழிக்கும் வரை போர் நிறுத் தம் என்பது இல்லை என சூளுரைத்து காசா மீது இஸ்ரேல் தாக்குதல்களை தொடர்ந்து வருகின்றது.

குறிப்பாக சர்வதேச நாடுகளின் கடும் எதிர்ப்பையும் மீறி காசாவின் ரபா நகர் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக தாக் குதல்களை நடத்தி வருகிறது. போர் காரணமாக இடம்பெயர்ந்த 10 லட்சத் துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் ரபா நகரில் தஞ்சம் அடைந்துள்ளமையால் அங்கு தாக்குதல்களை நடத்த வேண் டாம் என அமெரிக்கா உள்ளிட்ட நாடு களும், ஐ.நா.வும் தொடர்ந்து வலியுறுத்தி




வருகின்றன.

ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் இஸ்ரேல் ரபா நகர் மீதான தாக்குதலை நாளுக்குநாள் தீவிரப்படுத்தி வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ரபா நகரில் நடத்தப்பட்ட வான்தாக்குதலில் 45 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு சர்வதேச அளவில் கடும் கண்டனம் எழுந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு மீண்டும் அதே பகுதியில் இஸ்ரேல் வான்தாக்குதல் நடத்தியது. இதில் 16 பேர் பலியாகினர். பலர் படுகாயம் அடைந்தனர்.

இதனைத்தொடர்ந்து நேற்றும் காசாவில் இஸ்ரேல் வான்தாக்குதலில் ஈடுபட்டது. இந்த தாக்குதல்களில் இதுவரை 37 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.


கனடா முரசு
பக்கங்கள் - 5
புதன்கிழமை 29/05/2024

## நீரில் மூழ்கி மரணங்கள் கனடாவில் அதிகரிப்பு!



கனடாவில் நீரில் மூழ்கி உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

C2 ▶





### ரஃபாவில் பொதுமக்களைக் கொன்ற

# இஸ்ரேலின் தாக்குதல் குறித்து

# திகில் நிலையில் கனடா அரசு!

### பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கருத்து

ஒன்ராரியோ, மே 29

இந்த வாரத் தொடக்கத்தில் ரஃபாவில் பொது மக்களைக் கொன்ற இஸ்ரேலிய தாக்குதல்களால் தனது அரசாங்கம் 'திகிலடைந்துள்ளது' என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

எனினும், அது தொடர்பில் என்ன செய்வார் என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது அவர் அதற்குப் பதிலளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'ரஃபாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளை கனடா எந்த வகையிலும் ஆதரிக்கவில்லை' என்று நாடாளுமன்றத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது பிரதமர் ட்ரூடோ தெரிவித்தார்.

# சபாநாயகரைப் பதவி நீக்கும் பிரேரணை தோல்வியுற்றது!

ஒன்ராரியோ, மே 29

நாடாளுமன்ற சபாநாயகர் கிரெக் பெர்குஸை பதவி நீக்கம் செய்வதற்கான எதிர்க்கட்சியின் பிரேரணை தோல்வியடைந்துள்ளது.

கட்சி சார்பான குற்றச்சாட்டுகளின் பேரில் சபாநாயகர் கிரெக் பெர்குஸை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணை கன்சர்வேட்டிவ் கட்சியினரால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இந்த பிரேரணைக்கு ஆதரவாக 142 வாக்குகளும், எதிராக 168 வாக்குகளும் அளிக்கப்பட்டன. கன்சர்வேட்டிவ் கட்சியினரும், கியூபெக் புளொக் கட்சியினரும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். லிபரல் கட்சியுடன் இணைந்து, புதிய ஜனநாயகக் கட்சியினர் பிரேரணைக்கு எதிராக வாக்களித்திருந்தனர்.



சபாநாயகர் பதவியில் இருந்து உடனடியாக விலகி எதிர்வரும் திங்கட்கிழமை புதிய சபாநாயகர் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என இந்தப் பிரேரணை கோரியிருந்தது.

ஏழு மாதங்களுக்கு முன்னர் சபாநாயகராக பதவி ஏற்ற கிரெக் பெர்குஸ், பாரபட்சமான நடத்தை குறித்த சர்ச்சைகள், குற்றச்சாட்டுகளுக்கு புதியவர் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பாலஸ்தீனிய ஆதரவு முகாமை விலக்கோம் டொரன்டோ பல்கலையில் அவர்கள் உறுதி

ஒன்ராரியோ,மே 29

டொரன்டோ பல்கலைக்கழகத்தில் பாலஸ்தீனிய ஆதரவு கூடார முகாமை அமைத்து அதில் தங்கியுள்ள எதிர்ப்பாளர்கள் தங்கள் முகாம்கள் நீக்கப்படமாட்டாது எனத் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக நிர்வாகம் தடை உத்தரவுக்கான கோரிக்கையை விரைவுபடுத்துவதற்கு நீதிமன்றத்தை நாடியுள்ள நிலையில், எதிர்ப்பாளர்கள் தங்கள் முகாமுக்கான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினர்.

'பல்கலைக்கழகத்தால் இடைநிறுத்தம் மற்றும் வெளியேற்றம் உட்பட கல்வித் தடைகள் மூலம் அச்சுறுத்தப்பட்ட நிலையில், கைது மற்றும் பொலிஸ் வன்முறை அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருந்தோம். இவை அனைத்தையும் மீறி, இந்த அச்சுறுத்தல்கள் அனைத்தும் இருந்தபோதிலும், நாங்கள் தொடர்ந்து இங்கு இருக்கிறோம்' என்று முகாம் அமைப்பாளர்களில் ஒருவரான எரின் மேக்கி கூறியுள்ளார்.

'இங்கே இருப்பதன் மூலம், டொராண்டோ பல்கலைக்கழகம் தங்கள் சொந்த மாணவர்கள் மீது பொலிஸாரை அழைப்பதற்கு உத்தரவாதம் இல்லை என்பதை நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே தெளிவாகக் கூறுகிறோம்' என்று அவர் மேலும் கூறினார்.

போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக வந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியை டெபோரா கோவன், முகாமை அகற்றுவதற்கான தடை உத்தரவைப் பெறுவதற்கான நிர்வாகத்தின் முடிவால் 'தாம் ஆழ்ந்த, ஆழ்ந்த ஏமாற்றம்' அடைந்துள்ளார் எனக் கூறியுள்ளார்.

---

## இஸ்ரேலின் தாக்குதல்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'உண்மையில், நாங்கள் டிசம்பர் முதல் (ஐக்கிய நாடுகள் உட்பட) போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்து வருகிறோம், நாங்கள் அதனைத் தொடர்ந்து செய்வோம்' என அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலிய தாக்குதல்களில் இருந்து தப்பியோடிய ஒரு மில்லியனுக்கும் அதிகமான பாலஸ்தீனியர்களுக்கு காஸா பகுதியில் உள்ள நகரம் பாதுகாப்பான புகலிடமாக மாறியுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் தேதி கொடூரமான ஹமாஸ் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலின் தற்காப்பு உரிமையை கனடா ஆதரித்து வந்தது.

ஆனால் தெற்கு நகரத்தில் தாக்குதலைத் தொடர வேண்டாம் என்று கனடா இஸ்ரேலை வலியுறுத்தியதாக ட்ரூடோ கூறுகிறார்.

ரஃபா ஹமாஸ் கோட்டையாக மாறியுள்ளதாகவும், கடந்த ஒக்டோபரில் இஸ்ரேலில் 1,200 பேரைக் கொன்ற போராளிக் குழுவை வழிமறிப்பதில் இது முக்கியமானது என்றும் இஸ்ரேல் கூறுகிறது.

---

## நீரில் மூழ்கி...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவின் சில மாகாணங்களில் இவ்வாறு நீரில் மூழ்கி பதிவாகும் மரணங்கள் அதிகரித்துள்ளன.

இந்தக் கோடை காலத்தில் மக்கள் கூடுதல் அவதானத்துடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

சில நொடிகளில் ஒருவர் நீரில் மூழ்கி மரணிக்கக் கூடும் எனவும், இதனால் அவதானத்துடன் இருக்க வேண்டியது அவசியமானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2020ம் ஆண்டில் மாகாணத்தில் 211 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

# அரசியல்வாதிகள் மீதான துன்புறுத்தல்கள் கனடாவில் அதிகரித்து வருகின்றனவாம்!

கனடாவில் அரசியல்வாதிகள் மீதான துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல்வாதிகளை இலக்கு வைத்து இவ்வாறு துன்புறுத்தல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நகராட்சி உறுப்பினர்கள் முதல் பல்வேறு பதவிகளை வகிக்கும் அரசியல்வாதிகள் இவ்வாறு அச்சுறுத்தல்களையும் துன்புறுத்தல்களையும் எதிர்நோக்கி வருகின்றனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தனிப்பட்ட வாழ்க்கையை இலக்கு வைத்தும் துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என அரசியல்வாதிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக அரசியல் வாதிகள் தங்கள் மீதான அழுத்தங்கள்,அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கின்றனர்.

அரசியல்வாதிகள் எதிர்நோக்கும் இவ்வாறான நெருக்குதல்களுக்கு தீர்வு வழங்கும் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# தற்காலிகக் குடியிருப்பாளர்களுக்கு பொலிஸ் சான்றிதழ் தேவையில்லை!

தற்காலிகக் குடியிருப்பாளர்களுக்கு பொலிஸ் சான்றிதழ்கள் தேவை எனத் தான் சொல்லவேயில்லை என்று கூறியுள்ளார் கனடா புலம்பெயர்தல் அமைச்சர்.

கனடாவில், ஹர்தீப் சிங் நிஜ்ஜர் என்பவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அது தொடர்பில் கனடா பிரதமர் வெளிப்படையாக இந்தியாவை விமர்சிக்க, இரு நாடுகளுக்கிமிடையிலான தூதரக உறவில் விரிசல் ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து, இந்திய மாணவர்களைக் குறிவைத்து பல நடவடிக்கைகளை எடுத்தது கனடா அரசு.

இந்திய மாணவர்கள் என்று மட்டும் சொன்னால் அது பிரச்சினையாகலாம் என்பதற்காக, மொத்த சர்வதேச மாணவர்களும் குறிவைக்கப்பட்டார்கள். இதை உலகமே அறியும். இம்மாதம், அதாவது, மே மாதம் 6ஆம் திகதி, மாணவர்களின் விசா விண்ணப்



பங்களை விலாவாரியாக சோதிக்க வேண்டும் என்று கூறியிருந்தார் கனடா புலம்பெயர்தல் துறை அமைச்சரான மார்க் மில்லர். அவர்களை சோதிப்போம், அவர்களுக்கு குற்றப் பின்னணி இருந்தால், அவர்கள் கனடாவுக்குள் நுழைய முடியாது என்று கூறியிருந்தார் அவர்.

இந்நிலையில், இந்திய கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரான Arpan Khanna, திங்கட்கிழமையன்று, நாடாளுமன்ற குடியுரிமை மற்றும் புலம்பெயர்தல் நிலைக்குழு முன் இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக கேள்விகள் எழுப்பினார்.

அவருக்கு பதிலளித்த மார்க் மில்லர், தற்காலிக குடியிருப்பாளர்களுக்கு பொலிஸ் சான்றிதழ் தேவை என நான் ஒருபோதும் சொல்லவில்லை என்று கூறியுள்ளார்.

ஆக, சர்வதேச மாணவர்கள் உட்பட, தற்காலிக குடியிருப்பாளர்களுக்கு பொலிஸ் சான்றிதழ் தேவையில்லை என கனடா அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

அரசு கைரேகை போன்ற அடையாளங்களை சோதிப்பதுண்டு என்று கூறிய மில்லர், ஆனால், தற்காலிக குடியிருப்பாளர்களுக்கு வழக்கமாக பொலிஸ் சான்றிதழ் தேவையில்லை என்றார். சில அதிகாரிகள், பாதுகாப்பு சோதனையின்போது பொலிஸ் சான்றிதழ் தேவை என கருதும் பட்சத்தில் மட்டுமே அவை தேவைப்படலாம் என்று கூறியுள்ளார் அவர்.




# ஒன்றாரியோ மாகாணத்தில் உண்ணிகளினால் தொல்லை

கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தில் உண்ணிகள் காரணமாக லைம் என்ற நோய் பரவுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தில் வழமையை விடவும் இம்முறை லைம் நோய்த் தொற்று அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்றாரியோவில் சுமார் 13 உண்ணி வகைகள் காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

கோடை காலங்களில் – குறிப்பாக பூச்சியம் பாகையை விடவும் கூடுதலான வெப்பநிலை நிலவும் போது – இந்த வகை உண்ணிகள் பரவத் தொடங்குகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உண்ணிகள் கடிக்கும் அனைவரும் நோய் வாய்ப்படுவதில்லை எனவும், அவரவர் உடல் நிலையைப் பொறுத்து நோய்ப் பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




# ஒன்ராரியோ மாகாணத் தேர்தல்கள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே?

ஒன்ராரியோ, மே 29

ஒன்ராரியோ மாகாணத் தேர்தல்கள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்கூட்டியே நடைபெறலாம் என எதிர்வுகூறப் பட்டுள்ளது.

ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் தமது அண்மைய அறிவிப்பில் விரைவில் தேர்தல் நடைபெற கூடிய ஊகங் களைத் தூண்டியுள்ளார்.

ஒன்ராரியோ மாகாணத் தேர்தல் 2026ஆம் ஆண்டு ஜுன் மாதம் நடைபெற வேண்டிய நிலையில், இந்தத் திகதியில் தேர்தல் நடப்பதை உறுதிப் படுத்த வழிசெய்யும் விதத்தில் முன் வைக்கப்பட்ட கேள்விகளை ஒன் ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் தவிர்த் துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் தேர்தல் திகதி குறித்த கேள்வி முதல்வரிடம் முன் வைக்கப்பட்டது.

ஆனாலும் அந்த கேள்விகளுக்கு அவர் நேரடியாகப் பதிலளிக்கவில்லை.

இந்த நிலையில் டக் ஃபோர்ட் தலைமையிலான மாகாண அரசாங்கத்தின் சமிக்ஞைகளை தனது கட்சி தீவிரமாக எடுத்துக் கொள்வதாகவும், தேர்தலுக்கு தயாராகுமாறு தமது கட்சிக்க அறிவுறுத்தியிருப்பதாகவும் ஒன்ராரியோ புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் மரிட் ஸ்டைல்ஸ் தெரிவித்துள்ளார்.

ஒன்ராரியோ லிபரல் கட்சியின் தலைவர் பொனி குரொம்பியும் தேர்தலை எதிர்பார்த்திருக்கிறார் எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

## வேலைநிறுத்தங்களின் போது மாற்றுத் தொழிலாளர்களை பயன்படுத்துவதற்குத் தடை!

ஒன்ராரியோ, மே 29

தொழிலாளர்களின் வேலைநிறுத் தங்களின் போது மாற்றுத் தொழிலாளர் களை பயன்படுத்துவதை தடை செய்யும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் ஏகமன தாக நிறைவேற்றப்பட்டது.

மே 27ஆம் திகதி நடைபெற்ற நாடா ளுமன்ற வாக்கெடுப்பில் இந்த சட்டமூலம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அனைத்துக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை குறிப்பிடத் தக்கது.

இந்த நிலையில் குறிப்பிட்ட சட்டமூலம் 316-0 என்ற கணக்கில் நிறைவேற்றப் பட்டது.

தொழிலாளர் அமைச்சர் சீமஸ் ஓ'ரீ கனினால் கடந்த வருடம் நவம்பர் மாதத் தில் இந்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

புதிய ஜனநாயகக் கட்சியுடனான இணக்க அரசாங்கத்தின் முக்கியமான உறுதிமொழிகளில் ஒன்றாக இந்த சட்ட மூலம் உள்ளது.

## மிசிசாகா நகர மேயர் தெரிவில் கரோலின் பரிஷ்க்கு வாய்ப்பு!

ஒன்ராரியோ, மே 29



மிசிசாகா நகர மேயராக கரோலின் பரிஷ் தெரிவாகுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக கருத்துக் கணிப் பொன்று தெரிவித்துள்ளது.

புதிய கருத்து கணிப்பு முடிவுகளின் படி, முடிவு செய்யப்பட்ட வாக்காளர் களில் 29 சதவீதமானோர் கரோலின் பரிஷ்க்கு வாக்களிப்பார்கள் எனவும், 24 சதவீதமானோர் டிபிகா டமர்லா வுக்கு வாக்களிப்பார்கள் எனவும் கூறியுள்ளனர்.

மூன்றாவது இடத்தில் அல்வின் டெட்ஜோ, 19 சதவீதமான வாக்கு களைப் பெற்றிருக்கின்றார்.

இந்தக் கருத்து கணிப்பு முடிவுகள் மூன்று வாரங்களுக்கு முன்னர் வெளி யான கருத்துக் கணிப்பு முடிவுகளுடன் ஒப்பிடும் போது கரோலின் பரிஷ்க்கு 8 சதவீத வாக்கு வீழ்ச்சியையும், டிபிகா டமர்லாவுக்கு 4 சதவீத வாக்கு அதிகரிப்பையும் வெளிப்படுத்தி யுள்ளன.

ஆரம்ப வாக்களிப்பு முடிவுகள் இதுவரை பொதுமக்களிடமிருந்து தேர்தலில் அதிகரித்த ஆர்வத்தைக் காட்டுகின்றன..

மிசிசாகாவைப் பொறுத்தவரை, 2022 தேர்தல்களின் அதே கால கட்டத்துடன் ஒப்பிடும் போது, முதல் மூன்று நாள்களில் முன்கூட்டிய வாக்க ளிப்பில் வாக்காளர்களின் எண் ணிக்கை 42 சதவீதம் அதிகரித் துள்ளது.

இந்தத் தேர்தலில் இதுவரை 2,250 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

முன்கூட்டிய வாக்களிப்பு ஜுன் 1-2 வரை தொடரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த தேர்தலுக்கான வாக்களிப்பு திகதி ஜுன் 10 ஆம் திகதியாகும்.

இந்த தேர்தலில் வெற்றி பெறுபவர் மிசிசாகா நகரின் ஏழாவது நகர முதல்வராக பதவி ஏற்பார்.

# ஒன்ராரியோவின் மாகாண அவையில் பூர்வீகக் குடிகளின் மொழியில் உரை

## வரலாற்று நிகழ்வு பதிவானது



ஒன்ராரியோ, மே 29

ஒன்ராரியோ மாகாண அவையில், ஆங்கிலம், பிரஞ்சு தவிர வேறு மொழி அதிகாரப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட வரலாற்று சம்பவம் பதிவாகியுள்ளது.

மாகாண உறுப்பினர் சொல் மமக்வா மே 28ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடந்த மாகாண அவை அமர்வில் தமது சொந்த மொழியான பூர்வீகக் குடிகளின் மொழியில் உரையாற்றி, வரலாற்றுச் சம்பவம் ஒன்றை பதிவு செய்தார்.

ஓஜி-க்ரி என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்த மொழியில், புதிய ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரான சொல் மமக்வா உரையாற்றினார்.

இதன் மூலம் முதன்முறையாக, ஒன்ராரியோ மாகாண அவையில்



ஆங்கிலம், பிரஞ்சு தவிர வேறு ஒரு மொழி அனுமதிக்கப்பட்டுள்ளது.

தனது சொந்த மொழியில் பேசியமைக்காக வதிவிடப் பாடசாலையில் தண்டிக்கப்பட்ட பல ஆண்டுகளுக்குப் பின்னர், பூர்வீகக்குடியைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர் சொல் மமக்வா மாகாண சபை கேள்வி நேரத்தில் தாய்மொழியில் கேள்வி எழுப்பினார்.

தனது முன்னோர்களின் மொழியில் சட்டமன்றத்தில் உரையாற்றுவது ஒரு “மகத்தான உணர்வு“ என அவர் தெரிவித்தார.

கனடாவின் வதிவிடப் பாடசாலை அமைப்பின் விளைவாக மொழியை இழந்த பூர்வீகக்குடியினர் சார்பாக தமது உரை அமைவதாகவும் அவர் கூறினார்.

# கனடிய சில்லறை வர்த்தகர்களை பாதிக்கும் திருட்டுச் சம்பவங்கள்!



கனடாவில் அதிக எண்ணிக்கையிலான திருட்டு சம்பவங்கள் இடம் பெறுகின்றன என சில்லறை வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தங்களினால் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் சவால்களை எதிர் நோக்க நேரிடுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஓராண்டு காலப்பகுதியில் சில்லறை வியாபார நிலையங்களில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களின் காரணமாக சுமார் ஐந்து பில்லியன் டாலர்கள் வரையில் நட்டம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய சில்லறை வர்த்தக நட்ட தடுப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கோவிட் பெருந்தொற்று காலப் பகுதிக்கு முன்னர் இருந்த நிலையை விடவும் தற்பொழுது அதிக எண்ணிக்கையிலான திருட்டு சம்பவங்கள் பதிவாகி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருட்டு சம்பவங்களை வரையறுப்பது தொடர்பில் கடந்த வாரம் சில்லறை வர்த்தக நிறுவன பிரதானிகள் சந்திப்பு ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

சில்லறை வியாபார நிறுவனங்களில் இடம் பெற்று வரும் திருட்டு சம்பவங்களின் காரணமாக மொத்த வருமானத்தின் 1.8 வீதமான நட்டம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலமாக கனடிய சில்லறை வியாபார நிலையங்களில் திருட்டு சம்பவங்கள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

திட்டமிட்ட அடிப்படையிலான திருட்டு சம்பவங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.